# சுற்றிவளைத்த இராணுவத்தைப் புலிகள் தாக்கியதில் 12 படையினர் மாண்டனர்!

(மன்னார்)
தலைமன்னாரில் நேற்று முன்தினம் விடுதலைப்புலிகளுடன் ஸ்ரீலங்கா இராணுவமும், கடற்படையும் கூட்டாக மோதியபோது பன்னிரண்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர், பதினைந்து பேர் சாயமடைந்தனர்.

தலைமன்னாரில் இருந்த இராணுவ முகாமை நேற்று முன்தனம் இராணுவத்தினர்அகற்றிவிட்டு கடற்படையுடன் சேர்ந்து கொண்டனர். இதனையடுத்து விடுதலைப்புலிகள் இராணுவத்தினர் விட்டுச் சென்ற முகாமை சோதனையிட்டுக் கொண்டிருந்தபோது இராணுவத்தினரும், கடற்படையினரும் புலிகளை சுற்றி வளைத்து தாக்குதல் தொடுத்தனர். இத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள் 04 விலை ரூபா: 3-00

## ஊழியர் வரவின்மையாலே தபால் விநியோகம் தாமதம்

(யாழ்ப்பாணம்)
பெரும்பாலான அலுவலக உத்தியோகஸ்தர்களும் ஊழியர்களும் கடமைக்கு சமுகமளியாமையினாலேயே தபால் விநியோகத்தில் தாமதம் ஏற்படுவதாக யாழ். பிரதம தபால் அதிபர் தெரிவித்துள்ளார். மூன்றில் ஒரு வீதமான ஊழியர்களே கடமைக்கு வருகின்றனர். அலுவலகத்திற்கு அண்மையாக உள்ள பலர் உட்பட (4 ஆம் பக்கம் பார்க்க)


# ஈழநாதம்

THE EELANAATHAM *Peoples Daily* மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஸ்ரீ ஆடி மீ 29 ஆம் உ செவ்வாய்க்கிழமை (14 - 08 - 1990) ஹிஜ்ரி 1410 முஹர்றம் 22 ஓசை 177


# அகதிகள் புறப்பட்ட அரைமணி நேரத்தில் ஹெலிசூட்டு 4 பேர் பலி!

## ஏழுபேர் காயம்; நேற்றுக் காலை யாழ். குடாக்கடலில் துயரச் சம்பவம்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்திலிருந்து இந்தியாவிற்கு அகதிகளாகப் புறப்பட்டு அரைமணி நேரத்திற்குள் ஸ்ரீலங்கா விமானப் படையின் ஹெலி மேற்கொண்ட தாக்குதலினால் வள்ள ஓட்டுனர், குழந்தைகள் உட்பட நான்குபேர் கொல்லப்பட்டனர், ஏழுபேர் படுகாயத்திற்குள்ளானார்கள். ஏனையோர் சிறுகாயங்களுடன் உயிர் தப்பினர்.

ஸ்ரீலங்கா அரச படையினர் பொதுமக்கள் மீது மேற்கொண்டுவரும் தாக்குதல்களில் இருந்து தப்பி வாழ்வதற்கென பாதுகாப்புத்தேடி இந்தியாவிற்குச் செல்வதற்கென யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளையும் சேர்ந்த ஆண்கள், பெண்கள், குழந்தைகள் உட்பட ஐம்பது பொதுமக்கள் மணியந்தோட்டப் பகுதியில் வள்ளம் ஒன்றை ஒழுங்கு செய்திருந்தனர்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஆலங்குளம் முகாம் மூடப்பட்டது

(மன்னார்)
ஆலங்குளம் இராணுவ முகாமை அகற்றிவிட்டுச் செட்டிகுளம் வழியாக மதவாச்சிக்குச் சென்றுகொண்டிருந்த ஸ்ரீலங்கா இராணுவத்தினர் செட்டிகுளப் பகுதியில் உள்ள கடைகள், வீடுகள், பாடசாலைகளைச் சேதமாக்கியுள்ளனர்.

## அரசே காரணம்

(கொழும்பு)
இலங்கையின் வடக்கு கிழக்குப் பிரதேசத்தில் சட்டம், ஒழுங்கு சீர்குலைவதற்கு அரசின் நடவடிக்கைகள் தான் காரணம் என்று பல அரசியற் தலைவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களுக்குப் பாதுகாப்புவழங்கும் படி ஜனாதிபதி பிரேமதாசா கூறியிருந்தும் அதனைப் பாதுகாப்புப்படையினர் நிறை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அகதி முகாம்களில் இட, உணவு நெருக்கடி

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு – அம்பாறை மாவட்டங்களில் தற்பொழுது ஏற்பட்டுள்ள வன்முறைகளை தொடர்ந்து அகதி முகாம்களிலும், ஆஸ்பத்திரிகளிலும் பெரும்நெருக்கடிஏற்பட்டுள்ளதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அகதி முகாம்களில் இட நெருக்கடியும் உணவுத்தட்டுப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அகதிகளுக்கு உதவுவதிலும் கட்டுப்பாடு வேண்டும்

**- ரஞ்சன்**

(கொழும்பு)
அகதிகளுக்கு உதவுவதிலும் சில கட்டுப்பாடுகளை அனுசரிக்க வேண்டும் என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா அறிவித்துள்ளார்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலமாகவோ, இராணுவம் மூலமாகவோ அல்லது விசேட அதிரடிப்படை மூல

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழரை அகதிகளாக விரட்டுவது இந்தியாமீது ஒருவகை ஆக்கிரமிப்பு நடவடிக்கையே

**- கருணாநிதி**

(கோயம்புத்தூர்)
" இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகளில்இருந்து அகதிகளாக தமிழ் மக்கள் வரவேண்டிய சூழ்நிலையை உருவாக்குவது இந்தியா மீது நடத்துகின்ற இலங்கையின் ஒருவகையான ஆக்கிரமிப்பு நடவடிக்கையே'' என்று தமிழ்நாடு முதலமைச்சர் மு. கருணாநிதி தெரிவித்துள்ளார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பவல் மீது தாக்குதல்; நான்கு இராணுவம் பலி

(மட்டக்களப்பு)
கோமாரி முகாமிலிருந்து 11ஆம் திகதி தாண்டியடிக்கு உழவு இயந்திரத்திலும், பவல் வாகனத்திலும் வந்தஸ்ரீலங்கா இராணுவத்தினர்மீது விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலின்போது நான்கு சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். ஐவர் காயமடைந்தனர்.

## கடற்படை மீது தாக்குதல்

சுண்டிக்குளம் கடற் பகுதியில் ஸ்ரீலங்கா கடற்படைமீது விடுதலைப்புலிகள் நேற்றுமுன்தினம் தாக்குதல் மேற்கொண்டனர். படையினருக்கு ஏற்பட்ட சேத விபரம் தெரியவில்லை

விடுதலைப் புலிகள் தரப்பில் மதன் (திருமலை) வீரமரணமடைந்துள்ளார்.

## நெல்லியடியில் குண்டுவீச்சு

(பருத்தித்துறை)
பருத்தித்துறை, கரவெட்டிப் பகுதிகளை உள்ளடக்கிய பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமை மாலை 6-30 மணியளவில் இரு குண்டுவீச்சு விமானங்கள் வட்டமிட்டு குண்டுகளை வீசின. இதனால் இப்பகுதிகளில் பலத்த பீதி ஏற்பட்டது.

(4ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் அகதிகள் இடமாற்றம்

(கொழும்பு)
சம்மாந்துறை - வீரமுனையில் உள்ள நாலாயிரம் தமிழ் அகதிகள் திருக்கோயில் பகுதிக்கு மாற்றப்படவுள்ளனர். நேற்று முன் தினம் இங்குள்ள ஆலயம் ஒன்றில் தஞ்சம் புகுந்த இருபத்தொரு தமிழ் அகதிகள் கொல்லப்பட்டதையடுத்தே இவ்வாறு இவர்கள்மாற்றப்படுகின்றனர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம் மக்களின் கொலைகள் அரசின் திட்டமிட்ட செயல்

(லண்டன்)
ஏறாவூரில் முஸ்லிம்கள் கொல்லப்பட்ட சம்பவத்துக்கு விடுதலைப் புலிகள் தொடர்பில்லை என லண்டனில் விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கைத் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் இனக் கலவரத்தை ஏற்படுத்தி விடும் நோக்கத்துடன் ஸ்ரீலங்கா இராணுவம் முஸ்லிம் மக்களின் படுகொலைகளை ஆயுதம் தாங்கிய குழுக்கள் மூலம் திட்டமிட்டு நடாத்தி வருகிறது எனவும் விடுதலைப் புலிகள் லண்ட

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பனை வளத்தைப் பயன்படுத்துவோம்

**அன்பான தமிழீழ மக்களே!**

இன்று எம் தமிழீழப் பிரதேசத்தில் சிறிலங்கா சிங்கள இனவாத அரசு மக்கள் மீது போரைத் திணித்துவிட்டு பொருளாதாரத் தடையினையும் விதித்துள்ளது. தொடரும் வான் தாக்குதல், ஷெல் தாக்குதலுக்கு (4ஆம் பக்கம் பார்க்க)

# தஞ்சமடைந்த அகதிகளுக்கு உதவுவோர் எவருமில்லை

(பருத்தித்துறை)

பலாலி, மயிலிட்டி, திருக்கோணமலை போன்ற இடங்களிலிருந்து இடம்பெயர்ந்து பருத்தித்துறைக்கு வந்த சுமார் 320 குடும்பங்கள் பருத்தித்துறை கலட்டி றோமன் கத்தோலிக்க பாடசாலையில் தஞ்சமடைந்துள்ளனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் மீனவர்களாவர்.

இந்த அகதிகளுக்கு சமூக சேவை நிறுவனங்கள் எவையும் எந்தவிதமான உதவிகளையும் வழங்கவில்லையாம். இதனால் இங்கு தஞ்சமடைந்துள்ள குடும்பங்கள் பலத்த இன்னல்களை அனுபவித்து வருவதாகக் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது. (25)

# குவைத்திலிருந்து ஈராக் விலகிச் செல்வதானால்

- ஆக்கிரமித்த பகுதிகளிலிருந்து இஸ்ரேல்
- அரபு பிரதேசத்திலிருந்து மேலைத்தேய படைகள்
- சவூதியிலிருந்து அமெரிக்கத் துருப்புகள்

# வெளியேறவேண்டும்! ஈராக் அதிபர்

# நிபந்தனை: அமெ.இஸ்ரேல் மறுப்பு!

(பாக்தாத்)

குவைத்தில் இருந்து ஈராக்கிய இராணுவ துருப்புக்களின் வெளியேற்றத்திற்கான நிபந்தனைகளை ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசைன் அறிவித்துள்ளார்.

நேற்று முன்தினம், பாக்தாத்தில் வானொலி, தொலைக்காட்சி மூலம் உரையாற்றிய சதாம் ஹுசைன் இந் நிபந்தனைகளை அறிவித்தார்

ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் இருந்து இஸ்ரேலியப் படைகள் விலக வேண்டும் என்றும், வளைகுடா பிரதேசங்களில் வந்திறங்கியுள்ள மேலைத்தேச போர் வீரர்களோ போர் விமானங்களோ அகற்றப்படவேண்டும் என்றும், சவுதி அரேபியாவில் இருந்து அமெரிக்கப் படைகள் அகற்றப்பட வேண்டும் என்றும் நிபந்தனை விதித்துள்ளது.

இவர்களுக்குப் பதிலாக ஐக்கிய நாடுகள் சபையின் கண்காணிப்பில் அரபுப் படைகள் நிறுத்தப்படவேண்டுமென்றும் கேட்டுள்ளது.

ஆனால் அமெரிக்காவும் இஸ்ரேலும் இந் நிபந்தனைகளை நிராகரித்துள்ளன. ஏனைய நாடுகள் இதுவரை எவ்வித கருத்துக்களையும் வெளியிடவில்லை.

அத்துடன் ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசைன் தாம் விதித்த நிபந்தனைகள் அரபு இஸ்ரேல் மற்றும்லெபனானிய உள்நாட்டுப் போர் போன்ற மத்திய கிழக்குப் பிரச்சினைகள் தீர வழிவகுக்கும் எனவும் குறிப்பிட்டார்.

இதேவேளை குவைத்தில் இருக்கும் வெளிநாட்டவர்கள் எதுவித ஆபத்தும் இன்றி இருப்பதாக ஈராக்கிய வெளியுறவுத் துறை அமைச்சர் தாரிக்அசீஸ் அறிவித்துள்ளார்

## அமெரிக்க இஸ்ரேலின் விமர்சனம்

(வாஷிங்டன்)

ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசைனின் நிபந்தனைகள் குறித்து அமெரிக்க ஜனாதிபதி மாளிகையும் இஸ்ரேலும் கருத்து வெளியிட்டிருக்கிறது.

ஈராக் தனித்து ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் இருந்து மக்களின் கவனத்தை திசை திருப்பிடச் செய்வதற்காக செய்யப்படும் இன்னொரு முயற்சி தான் இந்த நிபந்தனை என்று அமெரிக்கா கருத்து வெளியிட்டு இருக்கிறது.

ஈராக்கின் மட்டகரமான ஒரு பலிவுப் பிரச்சாரம் தான் இந் நிபந்தனை என்று இஸ்ரேல் தெரிவித்திருக்கிறது.

## போராளிகளின் நலன் வேண்டி பிரார்த்தனை

(பருத்தித்துறை)

தமிழீழப் போராட்டத்தில் வீரமரணமடைந்த தமிழீழ விடுதலைப் புலிகளினதும், பொதுமக்களினதும் ஆத்ம சாந்தி வேண்டியும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு வீரம் கிடைக்க வேண்டியும் தமிழீழப் போராட்டம் வெற்றி பெற்று தமிழீழ மக்களுக்கு சுபீட்சமான எதிர்காலம்மலர வேண்டியும் தெய்வ ஆசி வேண்டி பருத்தித்துறை, புலோலிப் பகுதிகளில் உள்ள ஆலயங்களில் விசேட அபிஷேகங்கள், பூசைகள், ஆராதனைகள், பஜனைகள், பிரசங்கங்கள் என்பவை பொதுமக்களால் நடாத்தப்பட்டு வருகின்றன. (25)

## இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

பரந்தனில் இயங்கி வந்த உதவி விவசாயப் பணிப்பாளர் (விதைகள்) அலுவலகம் தற்போதைய சூழ் நிலை காரணமாக வட்டக்கச்சி அரச பண்ணைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக உதவி விவசாய பணிப்பாளர் (விதைகள்) திரு. ஆர். சந்தையா அவர்கள் அறிவித்துள்ளார். (ம)

## களஞ்சியம் உடைக்கப்பட்டு விதைகள் களவாடப்பட்டன

(யாழ்ப்பாணம்)

கடந்தகாலங்களில்பரந்தன் பகுதியில் நடந்த அசம்பாவிதங்களால் பரந்தன் உதவி விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்தில் உள்ள களஞ்சியம் உடைக்கப்பட்டு முளைப்புத்திறன் இல்லாத காய்கறி விதைகளும், மேட்டு நிலப் பயிர் விதைகளும் களவாடப்பட்டுள்ளது. இந்த விதைகள் சகலதும் 1989 ஆம் ஆண்டிற்கு முற்பட்டவையாகும். விவசாய இலாகாவைகளில் அடைக்கப்பட்டு ஆண்டு குறிக்கப்பட்டுள்ளது. இதுபற்றி விவசாயிகள் விழிப்பாக இருக்கும்படி பரந்தன் உதவி விவசாயப் பணிப்பாளர் திரு. ஆர். சந்தையா அவர்கள் அறிவுறுத்தல் விடுத்துள்ளார். (ம)

## பொம்மர் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

நேற்றுக்காலை 7.45 மணியளவில் தெற்குப் புன்னாலைக்கட்டுவன் சந்தியில் பொம்மர் விமானம் ஒன்று குண்டு வீச்சு நடாத்தியமையால் முருகையா என்பவரது தேனீர்க்கடை, நவாஸ் தையல் கடை, மற்றுமொருபலசரக்குக் கடை என்பன பலத்த சேதமடைந்தன இச் சம்பவத்தில் மூன்றுபேர் பலத்த காயமடைந்து போராளிகளால்வைத்திய சாலைக்கு விரையப் பட்டனர்.

## பொதுஇடங்களில் பதுங்கு குழிகள்

(தெல்லிப்பளை)

குப்பிளான் சிற்றூர் அவையினர் தமது கிராமத்தில் பொதுமக்கள் அதிகம் கூடுகின்ற இடங்களை இனம் கண்டு அவற்றிற்கு அருகாமையில் பதுங்கு குழிகளை அமைக்கும் நடவடிக்கையினை மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் முதற் கட்டமாக வர்த்தக நிலையங்கள், மரக்கறிச்சந்தை, வாசிகசாலை என்பன அமைந்துள்ள குப்பிளான் சந்திப் பகுதியில் விக்கினேஸ்வரா சனசமூக நிலையத்திற்கு அண்மையில் பதுங்கு குழியொன்றினை அமைத்து முடித்துள்ளனர். (26)

## தகவல் தருவோருக்கு சன்மானம்

கடந்த வியாழக்கிழமை (9-8-1990) அன்று இரவு அசாதாரண சூழ்நிலை காரணமாக நாம் கோயில் ஒன்றில் தஞ்சம் புகுந்து இருந்த வேளையில், எமது வீடு உடைக்கப்பட்டு 12 பவுன் நகை உட்பட ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் களவு போயுள்ளன. இவற்றைவிட மயில்வாகனம் என்பவரது குளுக்கோஸ், கோடியல் ஐயாயிரம் ரூபா ரொக்கப் பணம் என்பனவும் களவு போயுள்ளன.

இவை பற்றிய விபரம் தெரிந்தவர்கள் பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொண்டால் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

செல்வரெட்ணம் ஆசிரியர்
15, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

(R 573)

## ஹெலி சூட்டிற்கு ஊழியர் பலி

(தெல்லிப்பழை)

கடந்த சனிக்கிழமை நண்பகல் சுன்னாகத்தில் ஹெலியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் காங்கேசன்துறை சீமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர் இளங்கோவன் (கொல்லங்கலட்டி) மரணமானார்.

இவர் கொல்லங்கலட்டிப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து சுன்னாகம், செல்லாச்சி அம்மையார் வீதியில் உள்ள அவரது உறவினர் வீட்டில் வசித்து வந்தவர் எனவும் அறியப்படுகிறது. (26)

## கார்த்திகைத் திருவிழா

(கொழும்புத்துறை)

நல்லூர் கந்தசுவாமி கோயில் பத்தொன்பதாம் திருவிழா கார்த்திகை உற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை மாலை ஐந்து மணிக்கு நடைபெறும். (24)

## 17ஆம்நாள் நினைவஞ்சலி

களத்தில் 15-10-72



களத்தில் 29-07-90

### லெப்டினனட் சிறி
### கிஷ்ணமூர்த்தி ஹரிபத்மநாதன்

(யாழ்ப்பாணம்)

நீ... சின்னப் பூவாகச் சிரித்த போதே
விடுதலை நெருப்பாகத்தான் விரிந்தாய்
உன் கனவுகள் கூட—
களத்தைச் சுற்றியே பிறந்தன
எதிரியின் வரவுக்காக விழித்திருந்தாய்
வேங்கையே நீ சாகவில்லை
சரித்திரமாக எழுந்து கொண்டாய்
சிறி
சின்ன வேங்கையே!
உன் கல்லறைக்கும் கை முளைக்கும்
ஆயுதங்கள் கைமாறுமே தவிர
இலட்சியம் மாறப் போவதில்லை,
இது உறுதி.

வேங்கைகள் கோழைகள் ஆவதும் இல்லை!
விலங்குடன் வேங்கைகள் நடந்ததும் இல்லை!!

— யாழ் மக்கள்

## வங்கிக்கிளைகள் மீண்டும் நாளை திறக்கப்படலாம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை இலங்கை வங்கியும், பருத்தித்துறை தேசியசேமிப்பு வங்கியும் மீண்டும் நாளை 15 ஆம் திகதிபுதன் கிழமை தொடக்கம் இயங்கத் தொடங்குமென்று பருத்தித்துறை இலங்கை வங்கி முகாமையாளர் திரு. எஸ். மகாலிங்கம், பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் திரு.ரீ.கமலசேகரம் ஆகியோர் அறிவித்துள்ளனர்.

இவ்விரு வங்கிகளும் தற்போது பருத்தித்துறை நகரத்தில் பொன்னுச்சாமி கோட்டத்திற்கு மாற்றப் பட்டுள்ளதும் வாசகர்கள் அறிந்ததே இவ் வங்கிகள் இரண்டும் ஒரு வாரகாலமாக மூடப்பட்டுக் கிடக்கின்றன. (25)

## கண்ணீர் அஞ்சலி

1990 - 08 - 07இல் அகால மரணமெய்திய எமது அரிசி விநியோகஸ்தரான திரு. சி. கந்தசாமி அவர்களுக்கு கண்ணீர் அஞ்சலியையும், துயரத்தில் மூழ்கியிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பணிப்பாளர்கள், பணியாளர்கள்
யாழ். பல. நோ. கூ. சங்கம்.

(B 1324)

## அரசாங்க அறிவித்தல்

யாழ். சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர் பிரிவுக்குட்பட்ட நிறுவனங்களின் உத்தியோகத்தர்/ஊழியர்கள் நாட்டு நிலைமை காரணமாக தற்காலிகமாக இடம் பெயர்ந்து கடமையாற்றும் நிறுவனங்களிலிருந்து தமது முன்னைய நிறுவனங்களிற்கு 16-08-90க்கு முன்னர் கடமையைப் பொறுப்பேற்குமாறு வேண்டப்படுகின்றார்கள். இவ் உத்தியோகத்தர் – ஊழியர்களை மேற்படி திகதிக்கிடையில் விடுவிப்பது அந்தந்த நிறுவனத் தலைவர்களின் பொறுப்பாகும். தவறும்பட்சத்தில் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர் - ஊழியர்களின் வேதனங்கள் நிறுத்திவைக்கப்படும்.

ந. கனகசபை
சு. சே. பி. பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

(B-1323)

## சிந்தனைக்கு

சிறந்த அறிவுரையை ஏற்பது,
சொந்த ஆற்றலை வளர்ப்பதேயாகும்

- யொஹன் கேத்தே


# ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 14-08-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண் 05


## வருமுன் புரிந்து "கொண்டு" வாருங்கள்

இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதியின் பிரச்சினைகளை நேரில் கண்டறிவதற்கும் இப்பிரச்சினைகளை ஆராய்ந்து தீர்வு காண்பதற்கான யோசனைகளைத் தெரிவிப்பதற்கும் சார்க் நாடுகளின் குழுவொன்று அடுத்த முதல் வாரத்தில் இலங்கைக்கு மூன்றுநாள் விஜயமொன்றை மேற்கொண்டு வரவிருக்கிறதாம்.

இந்திய - இலங்கை நட்புறவுக் கழகத்தின் தலைவரான நீதிபதி வி. ஆர். ஸ்ரீகிருஷ்ணய்யர் இத்தகவலைத் தெரிவித்திருக்கிறார்.

இதேசமயம் இதே வடக்கு கிழக்குப் பிரச்சினைகளை ஆராய்வதற்கு சர்வதேச சமூகத்தின் பிரதிநிதிகள் குழுவொன்று இங்கு அனுப்பப்பட வேண்டுமென்று கொழும்புக்கு இரண்டுநாள் விஜயம் மேற்கொண்டிருந்த ஆஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் யோசனை தெரிவித்திருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கைக்கு இரண்டு மூன்று நாட்கள் வருகை தந்து வடக்குக் கிழக்கு நிலைமைகளை நேரில் ஆராய்ந்து தீர்வு காணக்கூடிய பிரச்சினையல்ல இந்தப் பிரச்சினை என்பதை இங்கு வரத் திட்டமிட்டுள்ள குழுக்கள் முதலில் உணர்ந்து கொள்ள வேண்டியது அவசியம்.

போரை நிறுத்துவதற்காகத்தான் இந்தக் குழுக்கள் இங்கு வருவதாக இருந்தால் இவை வரவேண்டிய அவசியமே இல்லை.

வடக்கு கிழக்கில் இப்பொழுதுதான் முதல்தடவையாகப் போர் நடைபெறவில்லை. 1987 ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் சிறிலங்கா சிங்கள பௌத்த அரசு மேற்கொண்ட ''லிபரேஷன் ஒப்பரேஷன்'' உலகறிந்த இன அழிப்பு நடவடிக்கை.

இலங்கையின் வடக்கு கிழக்குப் பிரச்சினை என்பது இலங்கையில் பிரதான சிறுபான்மை இனமான தமிழ்த் தேசிய இனத்தின் உயிர்ப்பிரச்சினை.

1948 ஆம் ஆண்டில் பிரிட்டிஷாரிடமிருந்து இலங்கை விடுதலை பெற்றதிலிருந்து தமிழ் மக்களின் தாயகமான வடக்கு கிழக்கு மாகாணத்தில் விவசாய விருத்தி என்ற பெயரில் திட்டமிட்டு சிங்களவரைக் குடியேற்றி தமிழ் மண் அபகரிக்கப்பட்டு வந்தது; இன்னமும் அபகரிக்கப்பட்டு வருகிறது

1956 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட ''சிங்களம் மட்டும்'' சட்டத்தின் மூலம் தமிழ் மக்களின் மொழி உரிமை, வேலை வாய்ப்பு பறிக்கப்பட்டன.

தமிழ் மண்ணையும் தமிழ் மக்களின் உரிமைகளையும் பாதுகாப்பதற்காக அகிம்சை முறையில் போராட்டம் நடத்திய போது இன ஒழிப்பு சிங்கள பௌத்த பேரினவாதிகளால் தொடங்கப்பட்டது.

அகிம்சைப்போராட்டங்களினால் தமிழ் மண்ணையோ மக்களையோ பாதுகாக்க முடியாதது மட்டுமல்ல தமிழ் மக்கள் கௌரவமாகவும் சுதந்திரமாகவும் வாழ்வதற்கு வழி பிறக்காது என்ற நிலையில் தான் தமிழ்இளைஞர்கள் ஆயுத மேந்தினார்கள்.

சிங்கள பௌத்த பேரினவாதிகளின் இன ஒழிப்பு நடவடிக்கைகள்தான் இங்கு தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப்போராடக் காரணம் என்பதை முதலில் இங்கு வரும் குழுக்கள் உணர்ந்து கொண்டு இப்பிரச்சினைக்குத் தீர்வு காண முற்படவேண்டும். போர் தொடங்கியதற்கும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருப்பதற்கும் காரணத்தை அறிந்துகொண்டால் தீர்வு சுலபமாகிவிடும்.

இங்கு வரவிருக்கும் குழுக்களானாலும் சரி வராதவர்களானாலும் சரி ''போர் நிறுத்தம்'' என்ற பேச்சை ஒதுக்கிவிட்டு-

இலங்கையில் தமிழ் மக்களை தமிழ்த் தேசிய இனமாக அங்கீகரிக்கவும்-

வடக்கும் கிழக்கும் தமிழ்த்தேசிய இனத்தின் தாயகம் என்பதை ஏற்றுக்கொள்ளவும்-

தமிழ் மக்கள் பாதுகாப்பாகவும், சுதந்திரமாகவும் கௌரவமாகவும் சுயநிர்ணய உரிமையுடனும் உத்தரவாதமளிக்கவும் வழி காண வேண்டும்.

இதற்கு இன்றுள்ள நிலையில் வடக்கு கிழக்கை பூரண சுயாட்சியுள்ள தமிழ் மாநிலமாக அங்கீகரித்து அரசியலமைப்பை மாற்றுவதுதான் ஒரே வழி.

''இலங்கையில் தமிழர் பிரச்சினை தீர்வதற்கு சமஷ்டி ஆட்சி அமைப்பு முறைதான் ஒரேவழி'' என்று மூதறிஞர் ராஜாஜி 1958 ஆம் ஆண்டிலேயே கூறியிருந்ததை ஸ்ரீ கிருஷ்ணய்யருக்கு நினைவூட்டுகிறோம்.

# ஈராக் யுத்தம் நியாயம் சரி முறை பிழை

ஈராக்கின் எண்ணெய் வளத்தை, எல்லைப் புறத்திலிருந்து குவைத் அபகரிப்பதாகக்கூறி, குவைத்தின் மீது ஈராக் படையெடுத்தது. இது ஈராக் முன்வைத்த நேரடிக் காரணமாகும். இன்னொரு துணைக் காரணத்தையும் ஈராக் கூறுகின்றது. அதாவது ஒரு பீப்பாய் மசகு எண்ணெய்க்கு 25 டொலர்கள் விலை நிர்ணயிக்கப்படவேண்டுமென்று ஈராக் கூறியபோதிலும், குவைத் 21 டொலர்களாக இவ் எண்ணெய் விலையை நிர்ணயித்தது. இதுவே குவைத்மீதான ஈராக்கின் படையெடுப்பிற்கான காரணமாகும்.

ஒரு பீப்பாய் மசகு எண்ணெய்யை 21 டொலர்களாக குவைத் விலை நிர்ணயித்ததன் மூலம், உலக சந்தையில் எண்ணெய் விலை வீழ்ச்சியடைய குவைத் காரணமாய் இருந்தது. இத்தகைய எண்ணெய் விலை வீழ்ச்சியானது, அமெரிக்காவிற்கும் அது சார்ந்த மேற்குலக நாடுகளுக்கும் சாதகமான விடயமாகும். இதனால் ஆத்திரமடைந்த ஈராக், அமெரிக்கா சார்பு அரசாகிய குவைத் மீது படையெடுத்து, அதனை தன்னுடன் இணைத்துக்கொண்டது.

இன்றைய இந்த ஈராக் - குவைத் பிரச்சினையால் ஈராக் படையெடுத்ததை மட்டும் முதன்மைப்படுத்தி அதன் காரணத்தை மேற்குலகம் இருட்டடிப்பு செய்துவிட்டது. இப்பிரச்சினையில் நாம் ஓர் விடயத்தை அவதானிக்க வேண்டும். அமெரிக்காவின் விருப்பத்திற்கேற்ப குவைத் எண்ணெய் விலையை நிர்ணயித்துள்ளது என்பதாகும். உண்மையில் ஈராக், குவைத் மீது ஆத்திரப்படுவது நியாயமானது. குவைத்திற்கு எதிரான நடவடிக்கையை அரபுலகமும், எண்ணெய் வள நாடுகளும் சேர்ந்து இதற்கெதிரான நடவடிக்கையில் ஈடுபடுவது அவசியமானது. ஆனால் இதற்கான தீர்வு ஈராக் குவைத் மீது தன்னிச்சையாக ஒரு படையெடுப்பை மேற்கொள்வதல்ல. குவைத் மீது ஈராக் ஆத்திரப்படுவது நியாயமானது. ஆனால் அதற்கான வழி படையெடுப்பல்ல.

இப்பிரச்சினையை சற்று ஆழமாக நோக்குவோம். உலகிலுள்ள எண்ணெய் வயல்களில் 60 வீதமான எண்ணெய் வயல்கள் அமெரிக்காவில் உண்டு. ஆனால் அமெரிக்கா தனது எண்ணெய் வயல்களை பாவனைக்கு பயன்படுத்துவதில்லை. ஆனால் அமெரிக்கா தனது எண்ணெய் வயல்களை தொடர்ந்து சேமித்துக் கொண்டு மத்திய கிழக்கிலுள்ள எண்ணையை குறைந்த விலைக்கு தருமாறு, அரசியல் இராஜ தந்திர ரீதியாக நெருக்கடி கொடுப்பது நியாயமல்ல. தனது கைப்பொம்மைகளாகிய குவைத், சவுதி அரேபியா போன்ற நாடுகளை வைத்துக் கொண்டு, அமெரிக்கா எண்ணெய் விலையை சூசகமாக குறைத்து வருகின்றது. உண்மையில் இது கொள்ளைக் காரத்தனத்தை விட மோசமானது. இத்தகைய பின்னணியில்தான் ஈராக்-குவைத்-சவுதி அரேபியா பிரச்சினையை நாம் பார்க்கவேண்டும்.

இதுதான் உண்மையாயின் ஏன் அரபுலக நாடுகளின் மத்தியிலும், எண்ணெய் வள நாடுகளின் மத்தியிலும் ஈராக்கிற்கு எதிர்ப்பு இருக்கின்றது என்ற கேள்வி எழலாம். இதற்கான பின்னணியை சற்று நோக்குவோம். இருபத்தி இரண்டு அரபு நாடுகளும், தொடர்ச்சியான நிலப்பரப்பைக் கொண்டிருப்பது மட்டுமன்றி, ஒரே, இன, மத, மொழி அரசுகளாக உள்ளன. ஆயினும் இவை துண்டுபட்டு இருபத்தியிரண்டு அரசுகளாக உள்ளன.

இவ் இருபத்திரண்டு அரசுகளும், தத்தமக்கிடையே தலைமைப் போட்டியில் அக்கறையாயுள்ளன. அதனைப் பயன்படுத்தி, இவற்றைத் துண்டுபட்ட அரசுகளாக வைத்திருப்பதிலேயே அமெரிக்கா கண்ணும் கருத்துமாக உள்ளது. இந்த வகையில் அரபு உலகத்திற்கு யார் தலைமை தாங்குவது என்ற போட்டி தற்போது அரபு நாடுகள் மத்தியில் உண்டு. ஈராக்கின் அதிபராகிய சதாம் ஹூசைன் அரபுலகின் தலைவராகிவிடக்கூடாதென எகிப்தின் அதிபர் முபாரக் அக்கறையாயிருக்கின்றார். ஈராக்கின் தலைமையை விரும்பாத முக்கிய அரபுலக தலைவர்கள் முபாரக்கின் பின்னால் நிற்கின்றார்கள். ஆதலினால் இந்த ஈராக் - குவைத் பிரச்சினையில் அரபு லீக் ஈராக்கிற்கு எதிராகத் தீர்மானம் நிறைவேறியுள்ளது. மேலும் இந்நாடுகள் அமெரிக்கா சார்ந்து அரசியல், பொருளாதார உறவுகளைக் கொண்டுள்ளன. ஆதலினால் இந்நாடுகள் அமெரிக்காவிற்கு சார்பான தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளன.

மேலைத்தேய நாடுகள் அனைத்தும் அமெரிக்கா தலைமையில் ஈராக்கிற்கு எதிராக அணி திரண்டதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. இப்பிரச்சினை சம்பந்தமாக சோவியத் யூனியன், சீனா, கியூபா, இந்தியா ஆகிய நாடுகளின் நிலைப்பாடுகள் கவனிக்கப்பட வேண்டியவையாகும். ஈராக்கிற்கு எதிரான அமெரிக்கா தலைமையிலான இராணுவ நடவடிக்கையை சோவியத் யூனியன் ஆதரிக்கவில்லை; அது இரட்டை நிலைப்பாட்டை கொண்டுள்ளது. குவைத்தின் மீது ஈராக் படையெடுத்திருக்கக்கூடாது. ஈராக் உடனடியாகப்படையை வாபஸ்பெற வேண்டும். ஆனால் அதேவேளை ஈராக் மீது அமெரிக்கா படையெடுக்கவும் கூடாது என்பதாகும். ஈராக்கிற்கு வழங்கிய இராணுவ உதவிகளை நிறுத்துவதாகவும், அதேவேளை பொருளாதார உதவிகளைத் தொடர்ந்து வழங்கப்போவதாகவும் சோவியத் யூனியன் கூறியுள்ளது. ஆனால் வளைகுடாப் பகுதி இராணுவ மயமாக்கப்படுவதை சோவியத் யூனியன் எதிர்க்கவில்லை. சீனாவும், கியூபாவும் ஏறக்குறைய ஒரே நிலைப்பாட்டைக் கொண்டுள்ளன. அவை ஈராக் - குவைத் மீது படையெடுத்ததை ஆதரிக்கவில்லை. அதேவேளை ஈராக்கிற்கு எதிராக அமெரிக்கா இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளக் கூடாது எனவும், வளைகுடாப் பகுதி இராணுவ மயமாகக் கூடாது எனவும் கூறுகின்றன.

இப்பிரச்சினையில் அமெரிக்க - சோவியத் நிலைப்பாடு தனியொரு விடயமாக ஆராயப்பட வேண்டிய விடயமாகும். அமெரிக்காவுடன் சோவியத் யூனியன் சுமூக உறவு கொள்ளத் தொடங்கிய சூழ்நிலையில் இப்பிரச்சினை உருவாகியது என்பதனைக் கருத்திற் கொண்டால், கடும்போக்கை சோவியத் யூனியன் பின்பற்றாததன் தார்ப்பரியத்தைப் புரிந்து கொள்ளலாம்.

இந்தியாவைப் பொறுத்தவரை அது மௌனத்தை சாதிக்கின்றது. ஈராக்கிற்கு எதிராக ஒரு சிறு அறிக்கையைக்கூட அது வெளியிடவில்லை. அனைத்துலக இஸ்லாமிய கழக மகாநாட்டில் இந்தோ-பாகிஸ்தான் சம்பந்தமான பிரச்சினையில், இந்திய நிலைப்பாட்டை அங்கீகரித்து தீர்மானத்தை முன்மொழிந்த நாடு ஈராக் ஆகும். ஆதலினால் ஈராக் நாட்டை இந்தியா பகைக்க விரும்பவில்லை.

எனவே கூட்டு மொத்தமாக பார்க்கும்போது இப்பிரச்சினையில் அடிப்படைக் காரணம் என்று எடுத்துக் கொண்டால் ஈராக் பக்கம் நியாயம் உண்டு. ஆனால் படையெடுப்புத்தான் இதற்கு உகந்த தீர்வு அல்ல.

### சாரணன்

## பூட்டோ அரசாங்கம் மீது விசாரணை நடத்த மன்றங்கள்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோ அரசாங்கம் நடத்திய ஊழல் குற்றச்சாட்டுக்களைவிசாரிக்க ஐந்து விசாரணை மன்றங்களை அமைக்க பாகிஸ்தானிய இடைக்கால அரசு முடிவு செய்துள்ளது.

பெனாசிர் பூட்டோ மக்கள் கட்சித் தலைவர்கள் மற்றும் முக்கிய அதிகாரிகள் மீதான லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணை நடத்தவே இந்த மன்றங்கள் அமைக்கப்படவுள்ளன.

ஆனால் பெனாசிர் பூட்டோ எந்த விசாரணைக் குழு முன்னாலும் தான் நிற்கமாட்டேன் என அறிவித்துள்ளார். பாராளுமன்றத்துக்கும், மக்களுக்கும் மட்டும் தான் பதில் சொல்ல வேண்டுமெனவும் குறிப்பிட்டார்.

இதேவேளை நேற்று முன்தினம் கராச்சியில் பெனாசிர் பூட்டோவின் அந்தரங்கக் காரியதரிசி உட்பட எட்டு அதிகாரிகள் பொது ஒழுங்கு பராமரிப்பு அவசர சட்டத்தின் கீழ் இராணுவத்தால் கைது செய்யப்பட்டனர்.

## விசேட பூசை

தமிழ் மக்களுக்கு அமைதி, சுபீட்சம், சமாதானம் வேண்டி அண்மையில் ஊரெழு சக்திபுரம் சிவபூரணி ஸ்ரீகாளியம்மன் தேவஸ்தானத்தில் விஷேடபூசை நடைபெற்றது.
(24)

# ஹொறவப்பத்தான காட்டில் மூன்று பிரிவாக நிறுத்திச் சுட்டுத் தள்ளியது இராணுவம்

## தப்பிவந்த பூவான் கணேசன் கூறும் தகவல்

(வவுனியா)

வவுனியாவில் சிறிலங்கா இராணுவத்தால் இம்மாதம் 9ஆம் திகதி வியாழக்கிழமை கைது செய்யப்பட்ட பதினைந்து தமிழர்களும் ஹொறவப்பத்தானை வீதி, ஒன்பதாம் கட்டை காட்டுப்பகுதியில் வைத்து கைகள், கண்கள் கட்டப்பட்ட நிலையில் கொடூரமாக சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இவர்களுடன் இராணுவத்தினரால் கூட்டிச் செல்லப்பட்ட பூவான் கணேசன் என்பவர் இரவு நேரமாதலால் அங்கிருந்து தப்பிவந்து ஈழநாதம் நிருபருக்கு இச் சம்பவம்பற்றிக் கூறியுள்ளார்.

வவுனியா கோவில்குளம் இராணுவ காவல் அரணில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டு இங்குள்ள சண்முகம் செல்வராசா என்பவரது அரிசி ஆலைக்குள் அழைத்துச்செல்லப்பட்டனர்.

அனைவரின் கண்களும் கைகளும் துணியினால் கட்டப்பட்டன. பலமாகத் தாக்கப்பட்டனர். இரவு வாகனம் ஒன்றில் ஏற்றப்பட்டு ஹொறவப்பத்தானை காட்டுப் பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டு மூன்று குழுவாக நிறுத்தப்பட்டனர்.

இவர்களில் ஒருவரின் கட்டு அவிழ்ந்துவிட்டதால் அவர் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சிலரின் கட்டுகளை அவிழ்த்துவிட்டார். அவ்வாறு எனது கட்டும் அவிழ்க்கப்பட்டது. இதைப் பயன்படுத்தி இரவு நேரமானதால் தான் தப்பி வந்ததாக பூவான் கணேசன் கூறினார்.

முதல் குழுவும் இரண்டாம் குழுவும் வரிசையாக நிறுத்தப்பட்டு தன் கண்முன்னால் துடிக்கத் துடிக்க சுட்டுக் கொல்லப்பட்டனர் எனவும் அவர் தெரிவித்தார்.

அவர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தான் தப்பியோடியதாகவும் பின்னர் காட்டுப் பாதைகளினூடாக சிங்கள கிராமங்களுக்கு மத்தியில் சத்தமின்றி கோவில்குளம் பகுதிக்கு வந்து இதனைத் தெரிவித்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

இச் சம்பவத்தில் ஒருபெண் உட்பட பதினைந்துபேர் இவ்வாறு படுகொலை செய்யப்பட்டனர்.

இராமசாமி தர்மலிங்கம் (36) கணேசபுரம், அருணாசலம் ஆனந்தராசா (26) சமளக்குளம், பிரபாகரன் (22) தச்சன்குளம், குமாரி (23) இவரது சகோதரர் குமார் (30), கனகசபை மகேந்திரன் (35) கோழியகுளம், தங்கராசா (45), பூவான் நாகேந்திரன் (21) (தப்பி வந்தவரின் சகோதரர்) உட்பட மொத்தம் பதினைந்துபேர் கொல்லப்பட்டனர்.

கொல்லப்பட்டவர்களிடமிருந்த மோதிரம், பணம், கைக்கடிகாரம், சைக்கிள்கள் என்பன படையினரால் அபகரிக்கப்பட்டுள்ளன.

இச் சம்பவத்தையடுத்து வவுனியா பகுதியில் பெரும் பீதி நிலவுவதுடன் கோவில்குளம் அரண்பகுதிக்கு வர தமிழர்கள் அஞ்சுகின்றனர். (தி)

### 10 முஸ்லிம்கள்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெரியாதவர்கள் தாக்கியதில் 10 முஸ்லிம்கள், 1 சிங்களவர் உட்பட 11 பேர் உயிரிழந்ததாக பி. பி. ஸி. அறிவித்தது.

### மாந்தையில்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர் இவர்களில் ஒருவர் அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் மரணமடைந்ததாகவும் ஸ்ரீ லங்கா பாதுகாப்பு அமைச்சு அறிக்கை ஒன்று தெரிவிக்கின்றது.

### திருமலையில்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அகதி முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தம்பலகாமம் மேற்குக் கொலனி, 98 ஆம் கொலனி, 9ஆம் கொலனி, பாலம்போட்டாறு, புதுக்குடியிருப்பு, பாரதிபுரம் பகுதிகளைச்சேர்ந்தவர்கள் தம்பலகாமம் அகதி முகாமிலும்;

ஆலம்கேணி, ஈச்சம் தீவு, உப்பாறு, சுங்கான்குழி, பிள்ளைகொல்லிமணல், இடிமண் ஆகிய பகுதி மக்கள் கிண்ணியா அகதி முகாமிலும்

திருக்கோணமலைப் பட்டினம், கப்பல் துறை, விளாங்குளம் வெள்ளைமணல், சீனன்குடா ஆகிய பகுதி மக்கள் வெள்ளைமணல் பகுதியில் உள்ள விளப்பன்வாக்களஞ்சியக் கட்டடத்திலும் அகதிகளாக வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் இந்த முகாமில் மூதூர் பச்சைநூல் கிறிஸ்தவ தேவாலயத்தில் தஞ்சமடைந்திருந்த மக்களும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கந்தளாய் 2 ஆம் கொலனி, கோவில் கிராமம் ஆகிய பகுதி மக்களுக்கு கந்தளாய் பரமேஸ்வரா மகா வித்தியாலயத்தில்முகாம் அமைக்கப்பட்டுள்ளது. (மா)

### மட்டக்களப்பு மாவட்ட

## ஊழியரைசெப்ரம்பர் 3க்குள் வேலைக்குத்திரும்ப பணிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்துவது குறித்து உயர் மட்டக் கூட்டம் ஜனாதிபதியின் செயலாளர் தலைமையில் நடைபெற்றது.

இராணுவ பொலிஸ் மற்றும் அமைச்சுக்களின் உயர் அதிகாரிகள் மட்டக்களப்பு அரசாங்க அதிபர் உட்பட பலர் இதில் கலந்து கொண்டனர்.

இம்மாவட்டத்தில் உள்ள ஒன்பது உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களை மீள இயங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து அடுத்த மாதம் 3ஆம் திகதிக்கு முன்னர் இங்குள்ள உதவி அரசாங்க அதிபர் பிரிவு அலுவலகங்களின் ஊழியர்கள் கடமைக்கு திரும்ப வேண்டும் எனவும்அறிவிக்கப்பட்டுள்ளது

இவ்வாறு வேலைக்கு சமுகம்தராதவர்கள் வேலையில் இருந்து நீக்கப்பட்டதாக கருதப்படுவார்கள்.

இந்த வெற்றிடங்களுக்கு போட்டி பரீட்சை மூலமாக புதியவர்களை நியமனம் செய்வது என்றும், மட்டக்களப்பு வாவியில் மீன்பிடிக்க அனுமதிப்பது எனவும் இங்கு தெரிவிக்கப்பட்டது.

இடம் பெயர்ந்தவர்கள் சொந்த இடங்களுக்கு திரும்பி வந்து தங்க வசதிகள் செய்வதுடன் ஆறுமாதகால உணவுப் பொருட்கள் வழங்கப்படும் எனவும் இக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

### பகல் வெளிச்சம்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிழமை இரவு நள்ளிரவுக்குப் பின் ஒன்றரை மணியளவில் திடீரெனத் தோன்றிய குண்டு வீச்சு விமானங்கள் இரண்டு பல தடவை வட்டமிட்டபின் கோட்டைப்பகுதியில் இரண்டு குண்டுகளை வீசிவிட்டு மீண்டும் குடாநாட்டின்மீது வட்டமிட்டது.

இதே சமயம் வானில் தோன்றிய ஹெலிக்கொப்ரர் ஒன்று பல தடவை வட்டமிட்டபின் பலாலிக்குச்சென்று திரும்பி வந்து ''வான வெளிச்சம்'' போட்டு நோட்டமிட்டது. நள்ளிரவிலிருந்து அதிகாலை மூன்று மணிவரை நீடித்த இந்த வான் படை நடவடிக்கையால் ஆழ்ந்த நித்திரைசெய்து கொண்டிருந்தவர்கள் குழந்தைகளையும் தூக்கிக்கொண்டுபதறித் துடித்துப் பதுங்கு குழிகளில் தஞ்சம் புகுந்து கொண்டனர்.

நேற்றுப் பகலில் ஹெலியும் போர் விமானங்களும் வானில் தோன்றாதது கண்டு சற்று நிம்மதியடைந்திருந்த யாழ்ப்பாண மக்கள் நேற்று இரவு எட்டுமணியளவில் ஹெலிக்கொப்ரரும் மற்றும் நான்கு போர் விமானங்களும் திடீரெனத் தோன்றி ''வான் வெளிச்சம் பரப்பி'' பல இடங்களிலும் குண்டு வீசியதுடன்ஹெலிக்கொப்ரர் பரவலாகத் துப்பாக்கிப் பிரயோகமும் செய்தது.

நகர் பகுதிகளிலிருந்து மக்கள் பலரும் கிராமப்புறங்களை நாடி நகர்ந்துள்ளதாலும் பதுங்கு குழிகளை நாடுவதாலும் உயிர்ச்சேதம் அதிகம் ஏற்படாமல் தவிர்க்கப்படுகிறது என்று சொல்ல வேண்டும்.

### வவுனியா தமிழ்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கான ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன.

ஈரற்பெரியகுளம் சிங்கள மகா வித்தியாலயத்தில் சிங்கள மாணவர்களுக்கான பரீட்சை நடைபெற்றது. பெருந்தொகையான சிங்கள மாணவர்கள் இதில் தோற்றினர்.

### வவுனியா

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதிபர் பியசேனா நியமிக்கப்பட்டுள்ளார்.

வவுனியாவில் மேலும் பல சிங்கள அதிகாரிகளை நியமித்துத் தமிழ்மக்களின் பாரம்பரிய பிரதேசமான வவுனியா மாவட்டத்தைச் சிங்கள மயப்படுத்த அரசு முயற்சி எடுத்து வருவதாகவும் கூறப்படுகிறது. (தி)

## குண்டு வீச்சு இல்லாததால் பக்தர்கள் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

விமானப்படை விமானங்கள் யாழ்நகரின் மீது கடந்த இரண்டொரு நாட்களாக தாக்குதல் நடத்தாததை தொடர்ந்து நல்லூர் கந்த சுவாமி கோவிலுக்கு நேற்று பெருவாரியான மக்கள் சுவாமி தரிசனத்திற்காக வந்திருந்தனர்.

புதிதாக கடலை வியாபாரிகளும் மணிக் கடைக்காரர்களும் வந்திருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது யாழ்.மாநகரசபையும் நேற்று கோவில் வீதிகளை அண்டிய பகுதிகளில் வீதித்தடைகளை மீண்டும் ஆரம்பித்தனர்.

### முல்லைத்தீவு

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இயங்கச் செய்வதற்கான முயற்சிகளை அரச அதிபர் எடுத்துள்ளார். இதுபற்றி நேற்றுநடைபெற்ற உயர் அதிகாரிகளின் கூட்டத்தில்ஆலோசிக்கப்பட்டது. (மு)

### ஈராக்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிலையில் மீண்டும் அரபு நாடுகளின் உச்சி மகாநாடு ஒன்று கூட்டப்பட வேண்டும் என யெமன் கேட்டுள்ளது. இந்நாடு ஈராக்கிற்குத் தனது ஆதரவைத் தெரிவித்துள்ளது.

அடுத்து பாகிஸ்தான் சவுதி அரேபியாவுக்கு பாதுகாப்பாக தனது 5000 படை வீரர்களை அனுப்பும் நடவடிக்கைக்கும் பாகிஸ்தான் பத்திரிகைள் பெரிதும் குறைகூறியுள்ளன.

### பாதகமான

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விடுத்துள்ள விஷேட செய்தி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

இந்த விஷேட செய்தியில் உணர்ச்சிகளைத் தூண்டும் வகையில் அறிக்கைகள் வெளியிடுவோருக்கு எதிராகப் பகிரங்க எச்சரிக்கையினையும் விடுத்துள்ளதுடன்; இலங்கை இன்று நெருக்கடிமிக்க ஒரு கால கட்டத்தை எதிர்நோக்கியுள்ளது என்றும், நாம் எடுக்கும் எந்தவொரு நடவடிக்கையும் நாட்டினதும், மக்களினதும் எதிர்காலத்தைப் பாதிக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

### யாழ் வைத்தியசாலை

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

படவுள்ளது.

பருத்தித்துறைத் துறைமுகத்திலிருந்து இன்று கொழும்பிற்குப் புறப்படும் 'சிகிரியா' கப்பலில் செல்லவுள்ள கலாநிதி செல்வி பி. சண்முகம் தலைமையிலான வைத்திய அதிகாரிகள் கொண்ட இக்குழுவினர் கொழும்பில் உள்ள அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கப் பிரதிநிதிகளையும், பாதுகாப்புச்சபை உறுப்பினர்களையும் சந்தித்துப் பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளனர். (ம)

### பாதுகாப்பாக உள்ளனர்

குவைத்திலுள்ள இலங்கையர் அனைவரும் பாதுகாப்பாக உள்ளார்கள் என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

### அகதி

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

லங்கா இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஏழாம் திகதி இந்த முகாமுக்குள் சென்ற இராணுவத்தினர், தங்கியிருந்த அகதிகளை விசாரணை செய்தபின்னர் இந்த மூவரையும் கைது செய்து இராணுவ முகாமுக்குக் கொண்டு சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### பாடசாலை

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், கல்வி அதிகாரிகள், சகல கொத்தணி அதிபர்கள் கல்வித்திணைக்கள அதிகாரிகள் ஆகியோரை தவறாது இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு யாழ் மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு. ஆர். சுந்தரலிங்கம் அவர்கள் தெரிவித்துள்ளார்.

## மரண அறிவித்தல்

### திருமதி அன்னபூரணி சோமசுந்தரஸ்தபதி

திருமதி அன்னபூரணி சோமசுந்தரஸ்தபதி அவர்கள் 13 – 08 – 90 அன்று சிவபதம் எய்தினார். அன்னார் சோமசுந்தரஸ்தபதியின் அன்பு மனைவியும், கெங்காதரனின் அன்புத் தாயாரும், சொர்ணாம்பிகையின் மாமியாரும், பாலசுந்தரத்தின் அப்பம்மாவும், தமிழ்நாடு நாட்டரசங்கோட்டை திருமதி மரகதவள்ளி இராமச்சந்திரனின் அன்புச் சகோதரியும், தமிழ்நாடு நாகர்கோயில் திரு. திருமதி நடராஜன் ஆச்சாரியின் சம்பந்தியும், காலஞ்சென்ற கோண்டாவில் தங்கவேல் ஸ்தபதி இரத்தினம்மாவின் மைத்துனியும், இராமமூர்த்தி சந்திரசேகரனின் அத்தையும், கலா, ரமணன், யசோதாதேவி, உமையாள், ஞானகணேசன் (CANADA) சாந்தினி ஆகியோரின் அன்பு பெரியதாயாரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் கோண்டாவிலில் அவரது இல்லத்தில் 14 - 08 - 90 செவ்வாய்க்கிழமை நடைபெற்று தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

கே. கே. எஸ் வீதி,
கோண்டாவில்.

தகவல்:
நா. சோமசுந்தரஸ்தபதி

(R/580)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31- ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.